மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர்கள் தான் குழப்பிக்கொண்டிருக்கிறார்களென்று கருதுகிறேன். மன்னிக்க வேண்டும். ஒப்பந்தப் பேருந்துகளை நாட்டுடைமையாக்குவதுபற்றி ஒரு சட்டம் (தி.மு.க. ஆட்சியில்) கொண்டு வந்து அந்த டிராஃப்ட் ஸ்கீம் குறித்து உயர்நீதிமன்றத்திற்குப் போய், தடை உத்தரவு வாங்கி, அந்த வரைவுத் திட்டமே செல்லாதென்று தீர்ப்பு ஆகியிருக்கிறது.

Black Topping of Road from Senthamangalam to Karavalli.

* 26 Q.—THIRU A. BALASUBRAMANIAM : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) whether the Government are aware of a proposal to black top the road from Senthamangalam of Salem district to Karavalli (via) Ramanathapuram Pudur; from the Salem Co-operative Sugar Factory Cess Fund of Mohanoor;

(b) if so, when action will be taken in this regard; and

(c) the amount set apart for this scheme?

சேந்தமங்கலத்திலிருந்து காரவள்ளிக்கு தார்சாலை போடுதல்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு வேளாண்மை நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை செஸ்நிதியிலிருந்து சேலம் மாவட்டத்தில் சேந்தமங்கலத்திலிருந்து காரவள்ளிக்கு இராமநாதபுரம் புதூர் வழியாக தார் சாலை போடுவது குறித்த செயற்குறிப்பு அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், எப்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் ?

(உ) அதற்காக ஒதுக்கீடு செய்துள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(இ) சர்க்கரைத்துறை இயக்குநரிடமிருந்து 1978-79ஆம் ஆண்டிற்கான சாலைப் பட்டியல் கிடைக்கப்பட்டவுடன் மேற்படி சாலைப் பணிகுறித்துத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(உ) மேற்படி சாலைப் பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 8.05 இலட்சம்.

(பிற்பகல் 4-30)

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 8.5 இலட்சம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் ஒரு மாதத்திற்கு முன்பாக டைரக்டர் ஆஃப் ஷுகர் அவர்களிடமிருந்து எனக்கு வந்த தபாலில் ரூ. 14.5 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே எந்தத் தொகை சரியான தொகை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 14.5 இலட்சம் ரூபாய் என்கிற அந்த மதிப்பீட்டுத் தொகை என்னிடத்திலேயும் வந்திருக்கிறது. எந்த அளவிலே அந்தத் தொகை ரூ. 14.5 இலட்சம் என்று வந்தது என்ற வினாவை நான் எழுப்பி அந்த ஃபைலை அனுப்பி மீண்டும் கேட்டிருக்கிறேன். ஆகவே பழைய மதிப்பீட்டுத் தொகையையே இங்கே குறிப்பிட்டேன்.

திரு. க. அறிவழகன் : கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலிருந்து போகிற சாலைகளுக்கு நல்ல தார் ரோடுகளைப் போடுவதுபற்றி செயற்குறிப்பு இது. வடபாதி மங்கலத்திலுள்ள தனியார் சர்க்கரை ஆலைகளிலிருந்து போகிற சாலைகளும் பழுதடைந்திருக்கின்றன. அதற்கும் இப்படிப்பட்ட செயற்குறிப்பு உண்டா? அதுவும் செயற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : எந்தச் சாலை என்று குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் கேட்டால், இன்னும் விளக்கமாகப் பதில் சொல்ல ஏதுவாக இருக்கும்.

திரு. க. அறிவழகன் : வடபாதி மங்கலத்திலிருந்து திருவாரூர் வழியாக மாயூரம் வரை செல்லும் சாலையாகும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மூலக் கேள்வி சேலம் மாவட்டத்தைப் பொறுத்தது. மாண்புமிகு உறுப்பினர் தஞ்சைக்குச் சென்றிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். தயவு செய்து திரும்பி வாருங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். (சிரிப்பு)

திரு. வி. ஆர். பெரியண்ணன் : இந்தப் பாதையை அமைக்கும்படி நானும் திரு. ஆ. பாலசுப்ரமணியம் அவர்களும் இந்த எம்.எல்.சி. பதவியை ஏற்ற காலத்திலிருந்து ஒவ்வொரு இடத்திற்கும் சென்று சீக்கிரமாக நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டு முயற்சிகளை எடுத்தோம். ஆனால் இன்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சாலையை அமைப்பதற்காக

சர்க்கரை ஆலை செஸ் நிதியில் பணம் ரெடியாக இருக்கிறது. ஆகவே சீக்கிரமாக அதைப் பயன்படுத்திக்கொண்டு சாலையை அமைக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் சேலம் மாவட்டத்தில் மோகனூரில் சர்க்கரை ஆலை மூன்று மாதங்களுக்கு ஓடுகிறது என்றால் ஒவ்வொரு மாதமும் தேவையான கரும்பைக் கொண்டு வரக்கூடிய அளவுக்கு உற்பத்தி செய்கிறோம். ஆகவே இதற்கு முன்னுரிமை கொடுத்து சீக்கிரம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அவர்கள் சொல்லக் கூடிய யோசனைகளையெல்லாம் இந்த அரசு கவனத்திலே கொண்டுதான் இது போன்ற சாலைகளை அமைப்பதிலே தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான் சாலைகளைப் புதுப்பிப்பதற்கும், புதுச் சாலைகளை ஏற்படுத்தவும் அதற்கென்று தனியாக தக்க ஒதுக்கீடுகளைச் செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : தக்க தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறியதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால் அந்தப் பணி எப்போது துவங்கப்படும் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கேட்ட, மோகனூரில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலை செஸ் நிதியிலிருந்து சேந்தமங்கலத்திலிருந்து காரவள்ளிக்கு இராமநாதபுரம் புதூர் வழியாக போகக் கூடிய தார் சாலையைப் போடுகிற திட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. செ. முத்துசாமி : பொதுவாகவே திட்டங்கள் போடும்போது ஒரு ஆண்டிலே மதிப்பீடுகள் போடப்படுகின்றன. பிறகு அந்த வேலையைத் துவங்காமல் இரண்டு மூன்று ஆண்டுகள் தள்ளிப் போடுகிறார்கள். அதற்குள் பொருள்களினுடைய விலைவாசி ஏறிவிடுகிறது. முதலில் 8 இலட்சம் ரூபாய்க்குப் போட்ட எஸ்டிமேட், மீண்டும் ரிவைஸ் செய்யப்பட்டு 14 இலட்சம் ரூபாய் என்று ஆகிறது. பிறகு ஓராண்டுக் காலத்திற்குப் பின் மீண்டும் திருத்தப்படுகிறது. இப்படி மீண்டும் மீண்டும் எஸ்டிமேட்களைத்

திருத்துவதால், திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுகிறது. பல்வேறு சங்கடங்கள் வருகின்றன. ஆகவே அதை மாற்றி ஒரு திட்ட மதிப்பீட்டைக் கொடுத்த அந்த ஆண்டிலேயே அத்திட்டத்தை அமுல் படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தச் சாலையைப் பொறுத்த வரையில், கடந்த 1975 ஆம் ஆண்டிலே இத்திட்டம், அப்போது ஆட்சியிலிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசால் போடப்பட்டது. அந்த ஆண்டிலேயே அந்தத் திட்டத்தை அவர்கள் செயல்படுத்தவில்லை. அதற்குப் பின்னால் ஆளுநர் ஆட்சிக் காலம் வந்தது. அவர்களுடைய காலத்திலும் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. பின்னர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே இந்தப் பணிகளைச் செய்து முடிக்க வேண்டுமென்ற குறியீட்டின் காரணமாக இதைத் தொடங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : "திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டம் அவர்களுடைய காலத்திலும் முடியவில்லை, அதற்குப் பின்னால் வந்த அவசர கால ஆட்சியிலும் முடியவில்லை" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலாவது இது முடியுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கண்டிப்பாக முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

Hogenekal Hydro Electric Power Scheme

* 27 *Q.*—THIRU M. SANKARALINGAM and THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether any step was taken to reach a separate agreement regarding Hogenekal Hydro Electric Power Scheme, without linking it with the Cauvery Water Distribution issue: and

(b) if so, the stage at which it now stands?